# TNPSC GROUP-IV EXAM (MODEL QUESTIONS AND ANSWER)



# டி.என்.பி.எஸ்.சி. குரூப்-4 தேர்வு

மாதிரி வினா-விடை 17

தொகுப்பு: சாம் ராஜேஷ்வரன்

## புவியியல் - தொடர்ச்சி

61. புலிப் பாதுகாப்புத் திட்டம் முதன் முதலில் எந்த தேசிய பூங்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது?
   - a. கார்பெட் தேசிய பூங்கா
   - b. காசிரங்கா தேசிய பூங்கா
   - c. சிம்லிபால் தேசிய பூங்கா
   - d. பன்னா தேசிய பூங்கா
   - e. விடை தெரியவில்லை

62. 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குறைந்த பாலின விகிதத்தைக் கொண்ட மாநிலம் ______
   - a. ஹரியானா
   - b. பஞ்சாப்
   - c. இராஜஸ்தான்
   - d. கேரளா
   - e. விடை தெரியவில்லை

63. 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் பெண் கல்வியறிவு வீதம் ________
   - a. 64%
   - b. 73.4%
   - c. 80.2%
   - d. 86.6%
   - e. விடை தெரியவில்லை

64. கீழ்க்கண்ட கூற்று வரிசையில் கடல் நீரின் உப்பளவை அதிகரிக்கும் சரியான வரிசையை தேர்வு செய்க.
   - a. அதிக நீராவியாதல், அதிக வெப்பநிலை மற்றும் அதிக மழைப்பொழிவு
   - b. அதிக நீராவியாதல், அதிக வெப்பநிலை மற்றும் குறைந்த மழைப்பொழிவு
   - c. குறைந்த நீராவியாதல், குறைந்த வெப்பநிலை மற்றும் அதிக மழைப்பொழிவு
   - d. குறைந்த நீராவியாதல், குறைந்த வெப்பநிலை மற்றும் குறைந்த மழைப்பொழிவு
   - e. விடை தெரியவில்லை

65. கீழ்கண்ட மாநிலங்களில் எது அதிக இந்திய மாநிலங்களை எல்லையாகக் கொண்டுள்ளது.
   - a. மத்தியபிரதேசம்
   - b. ஆந்திரப் பிரதேசம்
   - c. சட்டிஸ்கர்
   - d. அஸ்ஸாம்
   - e. விடை தெரியவில்லை

66. பட்டியல் I–ஐ பட்டியல் II–உடன் பொருத்துக

| பட்டியல் I (சிறப்பம்சம்) | பட்டியல் II (தனித்தன்மைகள்) |
|---|---|
| A. பாபர் | 1. சிவாலிக் மலைத் தொடரின் அடிப்பகுதியில் கிழக்கு – மேற்கு திசையில் நீளமாக அல்லது நெடுகிலும் அமைந்த ஒரு குறுகிய நிலப்பகுதி ஆகும். |
| B. தராய் | 2. கிழக்கு – மேற்கு திசையிலான சரியாக வடிகாலாகாத சதுப்பு நிலங்களாக உள்ள ஒரு குறுகிய நிலப்பரப்பு ஆகும். |
| C. பாங்கர் | 3. ஆற்றின் கரை நெடுகிலும் உள்ள வெள்ளச்சமவெளிகளில் உருவாகியுள்ள புதிய வண்டலால் ஆனது. |
| D. காதர் | 4. வெள்ளச் சமவெளிகளின் மேற்புறத்தில் பழைய வண்டலால் உருவானது ஆகும். |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 1 | 2 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

67. பொருத்துக:

| | |
|---|---|
| A. பொன் புரட்சி | 1. தீவிர வேளாண்மை |
| B. பசுமை புரட்சி | 2. கோதுமையுடன் கடுகு |
| C. நீலப் புரட்சி | 3. பழங்கள் உற்பத்தி |
| D. இரட்டை பயிரிடுதல் | 4. வேளாண் பயிர்கள் |
| E. தன்னிறைவு வேளாண்மை | 5. கடல் பொருட்கள் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 4 | 5 | 3 |
| b. | 4 | 3 | 5 | 2 | 1 |
| c. | 3 | 4 | 5 | 2 | 1 |
| d. | 3 | 1 | 4 | 2 | 5 |

e. விடை தெரியவில்லை

68. 'லோயஸ்' என்பது?
   - a. வண்டல் மண்
   - b. பனிப்பாறை
   - c. மணல் துகள்
   - d. பிளவுப் பாறை
   - e. விடை தெரியவில்லை

69. மழைப்பொழிவு, மின்னல், இடி இவற்றுடன் தொடர்புடைய மேகங்கள்?
   - a. கீற்று மேகம்
   - b. படை மேகம்
   - c. திரள் மேகம்
   - d. கார்படை மேகம்
   - e. விடை தெரியவில்லை

70. பொருத்துக

| பறவை சரணாலயம் | மாவட்டம் |
|---|---|
| A. சித்திரங்குடி | 1. திருநெல்வேலி |
| B. கரைவெட்டி | 2 நாகப்பட்டினம் |
| C. கூந்தன்குளம் | 3. அரியலூர் |
| D. கோடியக் கரை | 4 இராமநாதபுரம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 1 | 2 | 4 | 3 |
| c. | 3 | 1 | 2 | 4 |
| d. | 2 | 4 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

71. மாவட்டங்களில் அமைந்துள்ள காட்டுப் பகுதிகளை (சதவீத அடிப்படையில்) ஏறு வரிசையில் அமைக்க.

I. தேனி II. நீலகிரி

III. கன்னியாகுமரி IV. தர்மபுரி

   - a. IV, III, II, I
   - b. II, I, III, IV
   - c. IV, I, III, II
   - d. III, I, IV, II
   - e. விடை தெரியவில்லை

72. குறுங்கோள்களின் பாதை ________
   - a. பூமிக்கும் செவ்வாய்க்கும் இடையே
   - b. செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையே
   - c. வியாழனுக்கும் சனிக்கும் இடையே
   - d. செவ்வாய்க்கும் சனிக்கும் இடையே
   - e. விடை தெரியவில்லை

73. பூமிக்கரு (Core)ல் காணப்படும் வெப்பநிலை __________
   - a. $2000^\circ$c
   - b. $3000^\circ$c
   - c. $4000^\circ$c
   - d. $5000^\circ$C
   - e. விடை தெரியவில்லை

74. இவற்றுள் எது/எவை சரி?
   1. இந்திய வானொலி ஒலிபரப்பு 1927–ல் துவங்கியது.
   2. அகில இந்திய வானொலி என்ற பெயரை 1936–ல் பெற்றது.
   3. அகில இந்திய வானொலிக்கு தமிழகத்தில் 15 வானொலி நிலையங்கள் உள்ளன.
   - a. 1 மட்டும்
   - b. 1, 2–ம்
   - c. 1, 3–ம்
   - d. அனைத்தும் சரியே
   - e. விடை தெரியவில்லை

75. இவற்றுள் எது/எவை சரி?
   I. இன்ஸாட் – தகவல் தொடர்புக்கு பயன்படும் இந்திய தேசிய செயற்கைக் கோள்
   II. ஐ.ஆர்.எஸ் – இயற்கை வளங்களையும் வானிலைத் தகவல்களையும் தரும் தொலைவிலிருந்தே உணரும் செயற்கை கோள்
   - a. I மட்டும் சரி
   - b. II மட்டும் சரி
   - c. இரண்டும் சரி
   - d. இரண்டும் தவறு
   - e. விடை தெரியவில்லை

76. 'டோல்ட்ரம்ஸ்' என அழைக்கப்படும் மண்டலம்
   - a. பூமத்தியரேகை தாழ் அழுத்தமண்டலம்
   - b. துணை துருவ தாழ் அழுத்த மண்டலம்
   - c. துருவ உயர் அழுத்த மண்டலம்
   - d. உயர் அழுத்த மண்டலம்
   - e. விடை தெரியவில்லை

77. பொருத்துக :

| | |
|---|---|
| A. நீர்சக்தி | 1. போட்டோ வோல்டாயிக் தொழில் நுட்பம் |
| B. அணுமின்சக்தி | 2. வீட்டு உபயோகத்திற்காக கிராமப் புறங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது |
| C. சூரிய சக்தி | 3. கட்ச் வளைகுடா |
| D. உயிரிவாயு | 4. சிவசமுத்திர நீர் வீழ்ச்சி |
| E. ஓத சக்தி | 5. யுரேனியம் மற்றும் தோரியம் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 5 | 1 | 2 | 3 |
| b. | 2 | 4 | 5 | 3 | 1 |
| c. | 4 | 1 | 5 | 2 | 3 |
| d. | 3 | 1 | 2 | 5 | 4 |

e. விடை தெரியவில்லை

78. _________ வேளாண்மையே பரந்த வேளாண்மை என குறிப்பிடப்படுகிறது.
   - a. பழமையான
   - b. தன்னிறைவு
   - c. வணிக
   - d. தோட்ட
   - e. விடை தெரியவில்லை

79. இந்தியாவில் வெண்மை புரட்சியின் தந்தை
   - a. M.S. சுவாமிநாதன்
   - b. வர்கீஸ் குரியன்
   - c. C. சுப்ரமணியம்
   - d. ஹர்கோபின் குரானா
   - e. விடை தெரியவில்லை

80. தமிழகத்தில் எந்த இரு மாவட்டங்களில் தங்கம் கிடைக்கிறது?
   - a. வேலூர், சேலம்
   - b. நீலகிரி, கோவை
   - c. ஈரோடு, திருச்சி
   - d. நாமக்கல், சேலம்
   - e. விடை தெரியவில்லை

81. தமிழகத்தில் முதன் முதலில் தோன்றிய நீர்மின் நிலையம் எது?
   - a. குந்தா
   - b. மேட்டூர்
   - c. காடம்பாறை
   - d. கோதையார்
   - e. விடை தெரியவில்லை

82. கீழ்க்கண்டவற்றுள் எது/எவை சரி?
   1. தமிழக நிலப்பரப்பு உலக வரைபடத்தில் (latitudinally) கடக ரேகையில் வடக்கே $8^\circ4'$ முதல் $13^\circ35'$ வரையும் தீர்க்க ரேகையில் (longitudinally) கிழக்கே $76^\circ18'$ முதல் $80^\circ20'$ வரையும் பரவியுள்ளது.
   2. இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 6% சதவீதமான 1,30,058 சதுர கிலோ மீட்டர் பகுதியில் தமிழகத்தின் மொத்தப் பரப்பளவு உள்ளது.
   - a. 1 சரி 2 தவறு
   - b. 1 தவறு 2 சரி
   - c. இரண்டும் சரி
   - d. இரண்டும் தவறு
   - e. விடை தெரியவில்லை

83. வர்ஷநாடு குன்றுகளுக்கும் அகஸ்தியர் மலைக்கும் இடையேயுள்ள இடைவெளிப் பகுதி
   - a. ஆத்தூர் கணவாய்
   - b. செங்கம் கணவாய்
   - c. செங்கோட்டை கணவாய்
   - d. பாலக்காட்டு கணவாய்
   - e. விடை தெரியவில்லை

84. சரியானவற்றை /வைகளைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| 1. உலக வனவிலங்கு நாள் | அக்டோபர் 4 |
| 2. உலக வன தினம் | மார்ச் 21 |
| 3. உலக தண்ணீர் தினம் | மார்ச் 22 |

   - a. 1 சரி
   - b. 1, 2–ம் சரி
   - c. 2–ம் 3–ம் சரி
   - d. 1, 2, 3 சரி
   - e. விடை தெரியவில்லை

85. பொருத்துக

| நிலநடுக்கப் பகுதிகள் | |
|---|---|
| A. கட்ச் பாலைவனப்பகுதி | 1. மித அளவு சேத பகுதி |
| B. பீஹார் | 2. மிக அதிக அளவு சேத பகுதி |
| C. மேற்கு இமாலயம் | 3. குறைந்த அளவு சேத பகுதி |
| D. தமிழ்நாடு | 4. அதிக அளவு சேத பகுதி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 4 | 1 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 61 a | 62 a | 63 b | 64 b | 65 d |
| 66 d | 67 c | 68 c | 69 c | 70 a |
| 71 c | 72 b | 73 d | 74 d | 75 c |
| 76 a | 77 d | 78 c | 79 b | 80 b |
| 81 a | 82 a | 83 c | 84 d | 85 d |

நாளை புவியியல் பாட கேள்வி–பதில்கள் தொடரும்.